தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# டிஜிட்டல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதா? திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

புதுடெல்லி மார்ச் 30

2022-23 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு டிஜிட்டல் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதைப்பற்றி விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கடந்த 27ஆம் தேதி கேள்வி எழுப்பினார்.

**இது தொடர்பாக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் உறுப்பினர்கள் ராகுல் ரமேஷ் ஷெவாலே, சந்திரசேகர் சாஹூ, கோபிநாத்ராவ் முண்டே,) கிரீஸ் பாலச்சந்திர பாபட் ஆகியோர் எழுப்பிய விவரம் வருமாறு:**

டிஜிட்டல் பல்கலைக்கழகம் ஏற்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். மேலும் இது தொடர்பாக உள்நாட்டில் உள்ள அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

ஒடிசா மாநிலம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஆன்லைன் கல்வி வசதியைப் பெற முடியாத வகுப்பினருக்கு உதவும் வகையில் பல்கலைக்கழகத் திட்டத்தின் மூலம் அந்த

வசதியை உருவாக்கித் தர ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்ட விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

கடந்த 2021- 22 ஆம் ஆண்டு தேசிய உதவித்தொகை அமைப்பின் மூலம் வழங்கப்பட்ட அனைத்து உதவித்தொகை பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

உதவித்தொகை பெற்ற பயனாளிகள் அடுத்தடுத்து ஆண்டுகளில் பெறத் தவறியபோது அவர்களுக்கு உதவ ஒன்றிய அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ள இருக்கின்ற நடவடிக்கை விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை இணை அமைச்சர் சுபாஷ் சர்க்கார் அளித்த பதில் விவரம் வருமாறு:**

2022-23 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் டிஜிட்டல் பல்கலைக்கழகம் நிறுவப்படுவது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. நமது நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களின் இல்லங்களைத் தேடி சர்வதேசத் தரம் வாய்ந்த கல்வி இந்த டிஜிட்டல் பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்படும். மேலும் சென்னை ஐஐடி, டெல்லி பல்கலைக்கழகம், டெல்லி ஐஐடி, கரக்பூர் ஐஐடி ஆகிய உயர்தர முன்னணி கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்நோக்கு மாதிரி கல்வி முறையை ஸ்வயம், ஸ்வயம் பிரபா தொலைக்காட்சி அலைவரிசைகள் ஆகியவற்றின் மூலம் கற்பதற்கான வழிவகைகளும் இத்திட்டத்தில் அடங்கும். ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த அனைத்து அடித்தள சமுதாயத்தினரையும் இவற்றின் பயன் சென்றடையும் வகையில் இத்திட்டம் அமையும்.

தேசிய உதவித்தொகை அமைப்பை (என்எஸ்பி) தேசிய தகவல் மையம் (என்ஜசி) நிர்வகித்து வருகிறது. இது ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

2021- 22 ஆம் கல்வி ஆண்டில் மொத்தம் 115 உதவித்தொகை திட்டங்களை தேசிய உதவித் தொகை அமைப்பு செயல்படுத்தியது. இதில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுத் திட்டங்களும் ஒன்றிய அரசின் சார்பிலான திட்டங்களும் அடங்கும்.

இந்த உதவித்தொகை திட்டங்கள் பற்றிய விவரங்களை இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். தேசிய உதவித்தொகை அமைப்பு மாணவர்களுக்கு உதவி வருகிறது. தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு குறுஞ்செய்தி மூலமும் தகவல் அனுப்பப்பட்டு வருகிறது.

******